இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்
மட்டம் - 04

**LLU4610– அரசியலமைப்புச் சட்டம் II**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II - 2023/2024
காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 11.12.2024 நேரம்: பி.ப.01.30 - பி.ப.02.30

ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. சுமனா என்பவர் அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் ஆவார். பாடசாலையின் அதிபர் அண்மையில் அவளை ஒழுக்கத்திற்கு பொறுப்பான ஆசிரியர் ஒருவராக நியமித்தார். தர்ஷனா என்பவள் அப்பாடசாலையில் அவளது கீழ்ப்படியாமையால் அறியப்பட்ட மாணவி ஒருவர் ஆவார். ஒரு நாள் பாடசாலை பைகளை (School bags) சோதனை செய்யும் போது, பள்ளித் தலைவிகள் (prefects) தர்ஷனாவின் பையிலிருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்றைக் கண்டறிந்தனர். பாடசாலைக்கு கையடக்கத் தொலைபேசிகளை கொண்டு செல்வதானது ஒழுக்க விதிகளிற்கு அமைய தடைசெய்யப்பட்டுள்ளது. பாடசாலை தலைவியர் இதனை சுமனாவிற்கு தெரிவித்து சம்பவ இடத்திற்கு அழைத்த போது, பாடசாலையின் ஒழுக்கத்திற்கு பொறுப்பானவரான அவர் துர்மொழியால் தர்ஷனாவை ஏசியதுடன், பாடசாலை தலைவியரை தர்ஷனாவை பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் முழங்காலில் இருக்கச் செய்யுமாறு கட்டளையிட்டார். வெயிலில் தர்ஷனா அவ்வாறு மணித்தியாலங்களிற்கு நிறுத்தப்பட்டாள். வீட்டிற்கு திரும்பிய பின்னர், தர்ஷனா தன் தாயிடம் தனக்கு கடுமையான தலைவலி இருப்பதாக முறையிட்டாள். மறுநாளும் அவளது தலைவலி குணமாகாத காரணத்தால் அவள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கு அவள் மேலதிக வைத்திய சோதனைகளுக்காக அனுமதிக்கப்பட்டாள். பின்னர், வைத்தியர்கள் தர்ஷனாவிற்கு அரிய வகையான மத்திய நரம்பு மண்டலத்துடன் தொடர்புள்ள நோயொன்றால் பாதிப்புற்றுள்ளதாகவும், இந்நிலைமை ஆனது, நீண்ட நேரம் சூரிய ஒளியின் கீழ் அவள் நிறுத்தப்பட்டமையால் மோசமடைந்ததாகவும் தெரிவித்தனர். வைத்தியர்கள் இச்சேதாரம் மீள குணமாக்கப்பட முடியாது எனக் கருதுகின்றனர்.

   தர்ஷனாவின் தாய் இலங்கையின் அடிப்படை உரிமைகளின் சட்டவியலின் கீழ் பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுக்க முடியுமா என உமது ஆலோசனையை நாடுகிறார். பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றுடன் அவளிற்கு அறிவுறுத்துக.

   **( 20 புள்ளிகள்)**

2. இலங்கையின் நீதிமன்றம் ஆனது அரசியலமைப்பின் சமத்துவம் தொடர்பான உறுப்பரையை பாரம்பரிய வகைப்பாட்டுக் கோட்பாட்டிலிருந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பொருக்கோடல் செய்துள்ளது.

   இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களுடன் ஆராய்க.

   **( 20 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமை பெற்றது -